2015 செப்டம்பர் 22]

324—

கால்நடை கிளை நிலையக் கட்டடம்

***53117—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், குன்னகம்பூண்டி ஊராட்சியிலுள்ள கால்நடை கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க காவல் துறை மானியத்தினை அளிக்க வந்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குன்னகம்பூண்டி கால்நடை கிளை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். கிளை நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு விதிகளில் இடம் இல்லை. அந்தக் கிளை நிலையம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும்போது, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கே கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர், தமிழகத்தின் ஒளிவிளக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கருவில் இருக்கும் உயிர்களுக்கும் சலுகைகள் வழங்கி, கரும்பாய் இனிக்கும்*

மாண்புமிகு அம்மாவின் ஆட்சி தமிழகத்தில் நிரந்தரமாய் நிலைக்கும். மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியில் தங்களது பொற்பாதங்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில், குன்னகம்பூண்டி ஊராட்சியிலுள்ள கால்நடை கிளை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. மானியக் கோரிக்கைகள், 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22—காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22—காவல் (உள் துறை, மதுவிலக்கு*